# 17 சுவாமி விவேகானந்தர்



காலம் தோறும் மெய்யடியார்களும் ஞானியர்களும் தோன்றி இந்து சமயத்தின் இருப்பை உறுதிப்படுத்தி வந்துள்ளனர். அப் பரம்பரையில் வந்தவரே வீரத்துறவி விவேகானந்தர். உலகளாவிய ரீதியில் இந்து சமயத்தின் சிறப்புக்களை எடுத்துரைத்தவர். அவர் வங்காள தேசத்தை சேர்ந்தவர் பொய்யடிமையில்லாத வாழ்வு வாழ்ந்தவர். அவரது செயற்கரிய பணிகளால் இந்து சமயம் எங்ஙனம் மேன்மையடைந்தது என்பதனைப் படிப்போம்.

சுவாமி விவேகானந்தர் 1863 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் நாள் கல்கத்தா நகரில் பிறந்தார். அவரின் தந்தையார் **விசுவநாததத்தர்.** அவர் கல்கத்தா உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக விளங்கினார். தாயார் **புவனேஸ்வரி தேவியார்** அவர்கள் **நரேந்திரநாத தத்தர்** என்ற பெயரை தம் மகனுக்குச் சூட்டினர். எல்லோரும் அவரை **நரேந்திரன்** என்றே அழைத்தனர்.

நரேந்திரன் இளமையிலே கடவுள் பற்று மிகுந்தவராகக் காணப்பட்டார். அதேவேளை துடுக்குத்தனம் மிகுந்தவராகவும் விளங்கினார். நீராட்டும் வேளையில் அவரது தாயார் சிவசிவ என அவரது காதில் ஓதுவார். அதனைக் கேட்டதும் நரேந்திரன் துடுக்குத்தனம் அடங்கிவிடும். ‘‘அம்மா சிவன் எங்கே இருக்கிறார்’’ என்று கேட்பார்; அதற்கு தாயார் ‘‘நீ அந்தச் சிவனிடம் இருந்தே வந்திருக்கின்றாய்; நீ நல்ல பிள்ளையாக ஒழுகா விட்டால் சிவபிரான் உன்னைக் கைலாயத்துக்கு வரவிடமாட்டார்’’ என்று கூறினால் நரேந்திரன் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்து காணப்படுவார்.

நரேந்திரன் ஆறாவது வயதில் பாடசாலைக்குச் சென்றார். வங்காளம், ஆங்கிலம், சமஸ்கிருதம் முதலான மொழிகளைக் கற்றார். அம்மொழிகளில் உள்ள இலக்கியங்களை விரும்பிச் சுவைத்தார். சின்ன வயதிலேயே அவருக்கு ஞாபகசக்தி அதிகம்; மனதினை ஒருமுகப்படுத்திக் கற்கும் சக்தியை கல்லூரியில் கற்கும் காலத்தில் வளர்த்துக் கொண்டார். அதனால் குறுகிய காலத்துக்குள் அவரால் அதிகமான நூல்களைக் கற்க முடிந்தது. பண்டைய கிரேக்க ஜேர்மன் தத்துவங்களையும் பைபிள், குர்ரான் போன்ற நூல்களையும் ஆராய்ந்தார். மேலைத்தேய கீழைத்தேய நூல்களை ஒழுங்குறக் கற்றுக் கலைப்பட்டதாரியானார்


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

நூலறிவுடன் நாவன்மை, சங்கீத நாடகக் கலை ஞானம் என்பன அவரிடம் ஒருங்கே மிளிர்ந்தன. விளையாட்டுக்களிலும் திறமைமிக்கவராக விளங்கினார். கேட்போரைக் கவரும் சொல்லாற்றல் எவ்வித இடர்களுக்கும் அஞ்சாத மன உறுதி, உரமேறிய உடற்கட்டு என்பன நரேந்திரனுக்கு தனி வசீகரத்தைத் தந்தன.

பதினெட்டு வயது நிரம்பிய இவ்வாலிபனது உள்ளத்தில் பல ஐயங்கள் எழுந்தன. அவற்றுள் முக்கியமானது கடவுள் பற்றியதாகும். கடவுள் என்று ஒருவர் இருக்கின்றாரா? அவரைக் காணமுடியுமா? என்ற வினாக்களைப் பலரிடம் கேட்டார். தகுந்த பதில் கிடைக்கவில்லை; இந்நிலையிலே தான் தட்சிணேசுவரத்து இராமகிருஷ்ணரை முதன் முதலாக 1881 ஆம் ஆண்டு சந்தித்தார். எளிமையே வடிவமான தோற்றத்துடன், நுலவுறி அனுபவ ஞானம் கைவரப் பெற்று, இறையனுபத்தில் மூழ்கித் திழைத்த இராமகிருஷ்ண பரமஹம்சரை; ஆங்கில அறிவு வாய்க்கப் பெற்ற இளைஞனாகிய நரேந்திரன் சந்தித்தது முக்கியமான நிகழ்ச்சி. பழைய பாரதத்தை புதிய பாரதம் சந்திப்பது போல இவர்களது சந்திப்பு அமைந்தது.

நரேந்திரர் இராமகிருஷ்ணரை கண்டதும் ‘‘ஐயா தாங்கள் கடவுளைக் கண்டிருக்கிறீர்களா?’’ என்று கேட்டார். ‘‘கண்டிருக்கின்றேன், கண்டிருக்கின்றேன்; இதோ உன்னை என கண்முன்னே காண்கிறேன் அல்லவா? அது போல அவனையும் கண்டிருக்கின்றேன்’’ என்ற விடைகளின் மூலமாக கடவுளின் இருப்பை அனுபவத்தின் மூலம் நிரூபித்தார். அதைக் கேட்ட நரேந்திரனது உள்ளம் பூரித்தது. நரேந்திரர் இராமகிருஷ்ண பரமஹம்சரை தனது குரு நாதராக ஏற்று அடிக்கடி தக்கிணேஸ்வரம் வந்தார். **‘‘கடவுள் என ஒருவர் உண்மையில் இருக்கிறார். அனுபவத்தால் மட்டுமே அவரை அறிந்து கொள்ளலாம். உருவச் சிலைகளில் கடவுளைக் காணும் நாம் அவரை உயிருடன் உலவும் மனிதனிலும் காணலாம். மனிதனில் வாழும் அவ்இறைவனுக்கும் நாம் சேவை செய்ய வேண்டும். அதுவே நமது பிறவிப்பயன்’’** என்றவாறான இராமகிருஷ்ணரது வார்த்தைகள் ஒவ்வொன்றையும் சீர்தூக்கிப் பார்த்து ஏற்றுக் கொள்வார்.

இவ்வாறு குருவின் அருளினால் பேரறிவும் இறையனுபவங்கள் பலவும் வாய்க்கப் பெற்று அவ்வினை அனுபவித்தில் மூழ்கியிருந்தபோது ‘‘நரேன் இது உனக்குத் தகாது ஆல மரமாய் நின்று ஆயிரக்கணக்கான மக்களுக்கு நிழல் தருவாய் என்றல்லவா நினைத்தேன்; நீயோ உனது விமோசனத்தை மட்டுமே நாடுகிறாய்’’ என்று அவரது சமூகப் பணியின் அவசியத்தை அவருக்கு நினைவு படுத்தினார்.

1886 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி இராமகிருஷ்ண பரமஹம்சர் மறைந்ததும் அவரது சீடர் குழுவின் தலைமைப் பொறுப்பு முழுவதும் நரேந்திரனை சேர்ந்தது. நரேந்திரன் துறவு வாழ்க்கையை விரும்பி ஏற்றார். அத்துறவியின் பெயர் **சுவாமி விவேகானந்தர்**. தமது குரு நாதரது கருத்துப்படி மக்கள் சமூகத்துக்கு சேவை செய்வதே தன் கடமை எனக் கொண்ட சுவாமி விவேகானந்தர் இந்தியாவின் இமாலயம் தொடக்கம் கன்னியாகுமாரி வரை யாத்திரை மேற்கொண்டார். அறியாமை இருளிலும் ஏழ்மையிலும் கோடானுகோடி இந்திய மக்கள்படும் இன்னல்களைக் கண்டு அவரது நெஞ்சு விம்மியது. **யாருடைய இதயம் ஏழை மக்களுக்காக இரத்தக் கண்ணீர் வடிக்கிறதோ அவரையே மகாத்மா என்பேன்** எனக் குறிப்பிட்டார். இக் கூற்றுக்கு அமைய பிற்காலத்தில் வாழ்ந்தவரே மகாத்மா காந்தியடிகள்.

மக்கள் ஒவ்வொருவரும் சுதந்திர உணர்ச்சியுடனும் துணிவுடனும் இருக்க வேண்டும் என பிரச்சாரம் செய்தார். **எழுமின்! விழிமின்! எண்ணிய காரியம் கை கூடும் வரை ஓயாது உழைமின்! உழைமின்!** என மக்களைத் தட்டி எழுப்பினார். **தெய்வங்களாகுங்கள்! பிறரைத் தெய்வங்களாக்குங்கள்!** என்பன அவரது அரிய போதனை. இக்கூற்று விவேகானந்தர் சமயத்தையும் சமூகத்தையும் இருகண்களாகப் போற்றியமைக்கு எடுத்துக் காட்டுக்களாகும்.

மேல் நாட்டு மோகத்தில் சிக்கி இருந்த இந்திய மக்களுக்கு அவர்களது ஆன்மீக பாரம்பரியத்தின் சிறப்புக்களை எவ்வாறு உணர்த்தலாம் எனச் சிந்தித்தார். பாரத நாட்டின் பெருமையை மேனாட்டவரும் உணரும்படி செய்தலே இதற்கு சிறந்த வழி என முடிவு செய்தார். அந்நிலையில் 1893 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதி அமெரிக்காவின் சிக்காகோ நகரில் உள்ள கொலம்பஸ் மண்டபத்தில் அகில உலக சமயங்களின் மாநாடு தொடங்கியது. சமயப்போட்டிகள் பூசல்கள் மிகுந்திருந்த அக்காலக்கட்டத்தில் முதன்முதலாக சர்வமத மாநாடு கூட்டப்பட்டு பலரது வரவேற்பைப் பெற்றது. அம்மாநாட்டுக்கு அன்பர்களின் வேண்டுகோளையும் ஏற்று, இந்து சமயத்தின் பிரதிநிதியாக சுவாமி விவேகானந்தர் கலந்து கொண்டார். இந்து சமயத்தின் பெருமைகளை உலகறியச் செய்யும் பணி அவரைச் சார்ந்திருந்தது.

சுவாமி விவேகானந்தருக்கு முதல் உரையாற்றிய ஏனைய பேச்சாளர்கள் சபையோரை விளித்து சீமான்களே சீமாட்டிகளே என்றவாறு தமது பேச்சை ஆரம்பித்தனர். ஆனால் விவேகானந்தர் மதத்தால், இனத்தால், நிறத்தால் வேறுபட்ட மக்கள் அனைவரும் இறைவனது குழந்தைகளே; எமது சகோதரரே என்ற எண்ணம் உள்ளத்தில் உதித்தமையால் **''அமெரிக்க நாட்டுச் சகோதர சகோதரிகளே''** என விளித்து தமது பேச்சை ஆரம்பித்தார். மக்கள் யாவரையும் ஒரே குடும்பமாகக் காணும் இந்தத் ஞானியர் யார்? எம்மையும் தமது சகோதரராகக் கட்டித் தழுவும் இந்தத்தூரதேச துறவி யார்? எனச் சபையினர் சுவாமிகளது ஆரம்ப உரையிலேயே வசப்பட்டு நின்றனர்.

**இன்று காலையிலே இந்த மகாசபை கூடும்போது அடித்த மணி மங்கல மணியோசை ஆகுக. மூடக் கொள்கைகளை மாய்க்கும் மணியோசையாகுக; வாளினாலோ, எழுதுகோலினாலோ ஒருவரை ஒருவர் பகைக்கின்ற கொடூரச் செயலை அகற்றி விடுக. பல்வேறு நதிகளும் வெவ்வேறு இடங்களில் உற்பத்தியானாலும் ஈற்றில் கடலில் சென்று கலக்கவில்லையா? அவ்வாறே சமயங்கள் யாவும் ஒரே கடவுளையே சென்றடைகின்றன. எனவே மதத்தின் பெயரால் சண்டை இடுவதைத் தவிர்த்து மக்கள் சகோதர மனப்பான்மையுடன் வாழ வேண்டும்** என அவர் வற்புறுத்தினார். அவருடைய வார்த்தைகள் யாவும் மேனாட்டு மக்களிடம் ஆன்மீக உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டன. அவரது புகழ் அமெரிக்காவில் மட்டுமன்றி பல ஐரோப்பிய நாடுகளிலும் பரவியது. அமெரிக்காவில் இந்து சமய அறிவைப் புகட்டுவதற்காக நகரிலே வேதாந்த சங்கம் ஒன்றை நிறுவினார்.

சுவாமிகள் அமெரிக்காவில் இருந்து லண்டனுக்குச் சென்று அங்கு தமது அருளுபதேசங்களைச் செய்தார். அவ்வுரைகளால் கவரப்பட்ட மேல்நாட்டவராகிய **சகோதரி நிவேதிதை** (மார்க்ரெட் எலிசபெத் நோபிள்) **கப்ரின் சேவியர், திருமதி. சேவியர் ஜே.ஜே குட்வின்** ஆகியோர் அவரது சீடர்களாகி அவரை பின் தொடர்ந்தனர்.

மூன்று வருடகாலம் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் இந்து சமயப் பணியாற்றிப் புகழுடன் திரும்பிய விவேகானந்தரை முதலில் வரவேற்று உபசரித்த பெருமை நமது நாட்டுக்கே சாரும். சுவாமி விவேகானந்தர் மூன்று தடவை இலங்கைக்கு வருகை தந்திருந்தார் அதில் முக்கியத்துவம் வாய்ந்தது, இரண்டாவது தடவையாக 1897 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் நாள் விஜயமே. சுவாமிகள் கொழும்பு மாநகரில் இருந்து கண்டி, மாத்தளை, அனுராதபுரம், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்தார். கொழும்பு நகர மண்டபத்தில் **பரிசுத்த பாரதபூமி, இந்து சமயம்** என்னும் விடயங்கள் பற்றியும், அனுராதபுரம் புனித வெள்ளரசமரத்தடியில் **சமய வாழ்வில் சகிப்புத் தன்மை** என்னும் பொருளிலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் **நமது சமயம்** என்னும் தலைப்பிலும் சொற்பொழிவாற்றினார். இலங்கையில் பன்னிரெண்டு நாட்கள் திக் விஜயத்தை முடித்துக் கொண்டு ஜனவரி 26 ஆம் திகதி யாழப்பாணத்திலிருந்து தாயகம் திரும்பினார்.

தாய் நாடு திரும்பிய விவேகானந்தரை முதலாவதாக தமிழகத்தவரும் அதனைத் தொடர்ந்து ஏனைய மானிலத்தோரும் வரவேற்று மகிழ்வெய்தினர். சுவாமிகள் பரவாழ்வுக்கு உதவும் சமயப்பணியுடன் இகவாழ்வுக்கு உதவும் சமூகப் பணியையும் இணைத்து செயற்படுவதற்கென குருநாதர் பெயரால் சங்கம் ஒன்றை உருவாக்க முயன்றார். அதன் விளைவாகத் தோன்றியவையே **இராமகிருஷ்ண சங்கம், இராமகிருஷ்ண மடம்** என்பவையாகும். அவற்றுள் முதன் முதலாக சுவாமி விவேகானந்தரது ஆதரவில் அமைக்கப்பட்ட மடம் வேலூர் இராமகிருஷ்ண மடம் ஆகும். அது இராமகிருஷ்ண மடங்களுக்கெல்லாம் தலைமை இடமாக விளங்குகின்றது. பக்தி மார்க்கத்தைப் பரப்புவதும் சமூகத் தொண்டை வளர்ப்பதும் இதன் தலையாய நோக்கங்களாக அமைந்திருந்தன. அதன் கிளைகள் இந்தியாவிலும் உலகின் பல்வேறு இடங்களிலும் உள்ளன. இலங்கையில் கொழும்பு (வெள்ளவத்தை), மட்டக்களப்பு, கல்லடி முதலான இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

எனவே பாரத தேசத்துக்கும் உலகத்துக்கும் ஒளியேற்ற வந்த அன்பராக, அறிவுத்தீபமாக, வீரத்துறவியாக விளங்கிய சுவாமி விவேகானந்தர் இவ்வுலகில் 40 ஆண்டுகளே வாழ்ந்து; 1902 ஆம் ஆண்டு யூலை மாதம் 4 ஆம் திகதி கல்கத்தாவில் இறைவனடி சேர்ந்தார். அவரது சமாதி கல்கத்தாவில் ''சுவாமி விவேகானந்தர் சமாதி ஆலயம்'' என்னும் பெயரில் அமைக்கப்பட்டுள்ளது. கன்னியா குமரியிலும் சுவாமி ''விவேகானந்தர் தியானம் இருந்த கடற் பாறையின் மீது விவேகானந்தர் நினைவு மண்டபம்'' அமைக்கப்பட்டுள்ளது.

சுவாமி விவேகானந்தரது வாழ்க்கையில் இருந்து தியாகம், உண்மை, தன்னடக்கம், தன்னம்பிக்கை, பயமின்மை, சகிப்புத்தன்மை, செயலில் துறவு, சிரத்தை, பொறுமை, தெளிவான சிந்தனை, அமைதியான உள்ளம், முயற்சி, உழைப்பு, நல்லொழுக்கம், இறையன்பு, தைரியம், பலம், சுயமரியாதை, தன்னிறைவு முதலான பண்புகளை நாம் பெற்றுக் கொள்ளலாம்.

## 🕮 பாடச்சுருக்கம்

- சுவாமி விவேகானந்தர் இளமையில் இறை சிந்தனையிலும், தத்துவ ஆராய்ச்சியிலும் ஆர்வமுடையவர்.
- இராமகிருஷ்ணரது போதனைகளால் ஈர்க்கப்பட்டு தலைமைச் சீடராக விளங்கியவர்.
- இந்தியாவிலும் மேற்குலக நாடுகளிலும் இந்துசமயத்தின் பெருமைகளை எடுத்துரைத்தவர்.
- இலங்கையின் பல பிரதேசங்களில் அருளுரையாற்றியவர்.
- இராமகிருஷ்ண மடத்தைத் தோற்றுவித்தவர்.

## ✍ பயிற்சிகள்

**பின்வரும் வினக்களுக்கு விடை எழுதுக.**

1. சுவாமி விவேகானந்தரது இளமைக்கால நிகழ்வுகளைச் சுருக்கமாகத் தருக.
2. இராமகிருஷ்ணரை நரேந்திரன் சந்தித்தபோது அவரிடம் இருந்து எத்தகைய சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டார்?
3. நரேந்திரன் இராமகிருஷ்ணரிடம் இருந்து பெற்ற உபதேசங்களை எழுதுக.
4. சுவாமி விவேகானந்தர் இந்திய மக்களுக்கு ஆற்றிய அருளுரைகளை எழுதுக.
5. விவேகானந்தரது அமெரிக்க ஐரோப்பிய பயணங்களால் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிப்பிடுக.

## ॐ செயற்பாடு

- ♦ சுவாமி விவேகானந்தரது சொற்பொழிவுகள் இடம் பெற்ற நாடுகளின் பெயர்களை பட்டியற்படுத்துக.
- ♦ சுவாமி விவேகானந்தரது அருளுரைகளை ஆசிரியரின் உதவியுடன் தேடிப் பெற்று அவற்றை அட்டைகளில் எழுதி வகுப்பில் காட்சிப்படுத்துக.